2010 மே 12]

மாநிலங்களில் செய்திருப்பதைப்பதைப்போல செய்யலாமா என்றும் ஆய்வு செய்துகொண்டிருக்கிறோம். வருங்காலங்களில் *4* ஆண்டு கால B.Ed. Course, அதே நேரத்தில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற Degree மற்றும் ஒரு B.Ed. Course, அதையும் செயல்படுத்துவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. ஆகவே, ஆசிரியர்கள் பற்றாக்குறை என்பது தமிழகத்தைப் பொறுத்தவரையில் வராது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 178, மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

178—

சாலை வசதி

***113726—திரு. விடியல் எஸ். சேகர்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு பறவைகள் சரணாலயம் அருகில் கட்டைக்காடு, பிலக்காடு, தாசன்காடு, புதுகாடு பகுதிகளுக்கு சாலை வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க விரும்புகிறேன்:

(அ) ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம், வெள்ளோடு சரணாலயம் பகுதியில் கட்டைக்காடு, பிலக்காடு, தாசன்காடு, புதுகாடு பகுதிகளுக்கு சாலை வசதி செய்ய அரசிடம் திட்டம் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர், அவையில் இல்லை. அவருக்கு மாற்றாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

[2010 மே 12

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியத்தில் இருக்கிற வெள்ளோடு பறவைகள் சரணாலயத்தின் அருகில் இருக்கிற கட்டைக்காடு, பிலக்காடு, தாசன்காடு, புதுகாடு ஆகிய பகுதிகளுக்கு சாலை வசதி தேவை. அந்தப் பகுதிகளில் இருக்கிற சாலை என்பது, அது வி.மேட்டுபாளையம் இணைப்புச் சாலையாகவும் பயன்படுகிறது. அது சுற்றியிருக்கிற கிராம மக்களுடைய போக்குவரத்திற்கு மிகவும் அத்தியாவசியமாக இருக்கிறது. எனவே, அந்தச் சாலையை நிச்சயமாக அரசின்மூலம், வனத் துறையின்மூலம் அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, சென்னிமலையில் ஜாம்பமடைச் சாலை என்பது, அதே வனப் பகுதிக்குள்ளே வருகிறது. அந்தச் சாலையில் பகுதி வேலை முடிந்து, இன்னொரு பகுதி வேலை முடியாமல் இருக்கிறது. அதையும் நம்முடைய அமைச்சர் முடித்துத் தருவாரா எனக் கேட்க விரும்புகிறேன். அதேபோல, மொடக்குறிச்சி தொகுதி, அரச்சலூரிலே இருக்கிற தளவுமலையிலே முருகன் கோயிலுக்குச் செல்கிற வனச் சாலையை அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று கடந்த ஐந்தாண்டுகளாகக் கோரிக்கை வைக்கப்பட்டிருக்கிறது, அதற்கும் அமைச்சர் அனுமதி வழங்குவாரா என்று கேட்டு, அமர்கிறேன்.

முற்பகல் 10-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளோடு சரணாலயப் பகுதியில் இருக்கின்ற அந்தக் கட்டைக்காட்டில் நான்கு குடும்பங்கள் வசிக்கின்றார்கள். அதைப்போல, அந்தப் பகுதியில் இருக்கின்ற பிலக்காட்டிலே 7 குடும்பங்கள் வசிக்கிறார்கள். தாசன்காடு, புதுகாடு பகுதிகளில் விவசாய நிலங்கள் மட்டும்தான் இருக்கின்றன. இவர்கள் பயன்படுத்துவதற்காக, வெள்ளோட்டிலிருந்து பெருந்துறை இரயில் நிலையம் செல்வதற்கு ஒரு முக்கியச் சாலை இருக்கிறது. அதிலிருந்து 500 மீட்டர் தூரத்திலே இது அமைந்திருக்கிறது. அவர்கள் அங்கு இருக்கின்ற வழித்தடத்தைப் பயன்படுத்திக்கொள்ளலாம். விவசாய விளைபொருட்களை எடுத்துச் செல்வதற்கு ஏற்கெனவே வண்டிப் பாதை 600 மீட்டர் நீளத்திற்கு இருக்கிறது. அதை ஊராட்சியின்மூலம் மேம்பாடு

2010 மே 12]

செய்து, அந்தச் சாலையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். அவர் குறிப்பிட்டிருக்கின்ற, அதே தொகுதியில் இருக்கின்ற இன்னொரு சாலை, அனுமதிக்கப்பட்ட வழித்தடமாக இருந்தால், அதை அனுமதிப்பார்கள். இல்லை என்று சொன்னால், வனப் பாதுகாப்புச் சட்டப்படி அவர்கள் அதற்குரிய விண்ணப்பத்தை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கொடுத்தால், அது பரிசீலிக்கப்பட்டு உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்படும். அதைப்போல, அவருடைய அரச்சலூர் பகுதியிலே, மொடக்குறிச்சி தொகுதியிலே முருகன் கோயில் செல்வதற்குப் பாதை தடைப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். வனப் பகுதியிலே சாலை அமைப்பது என்றால், வனப் பாதுகாப்புச் சட்டத்தினுடைய அந்தக் கோட்பாடுகளை எல்லாம் அனுசரித்துத்தான் அதை அமைக்க முடியும். எனவே, மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அவர் அதற்கான கோரிக்கையை விடுத்து, அதன்மூலம் அதை நிறைவேற்றவும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 179, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

179—

புதிய பாலம்

***57978—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பண்ருட்டி தொகுதி, வடக்குத்து கிராமத்தில் புதிய பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வெள்ளக்கோவில் சாமிநாதன், நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேசிய நெடுஞ்சாலை எண் 45-சி-ல் அமைந்துள்ள சாலை மற்றும் பாலங்கள் ஆகியவற்றை மேம்பாடு செய்வதற்கான விரிவான திட்ட அறிக்கை இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் தயாரிக்கப்பட்டு வருகிறது. திட்ட அறிக்கையின்மீது